கல்முனை மாநகர சபை
அம்பாறை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 செப்தெம்பர் 22 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 செப்தெம்பர் 09 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 டிசெம்பர் 08 திகதி மா நகர சபையின் நகர ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கல்முனை மாநகர சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 18,500 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிரு க்கவில்லை.

(ஆ) பேரேட்டின்படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான மீளளிக்கப்படக்கூடிய வைப்பு மீதி ரூபா 32,344,040 தொகையாகக் காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் இம்மீதி ரூபா 31,221,629 எனக்காட்டப்பட்டதால் வைப்பு மீதி ரூபா 1,122,411 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(இ) சபையால் நிலையான வைப்பில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 24,379,424 தொகை மீது மீளாய்வாண்டிற்காகப் பெறவேண்டிய வட்டி வருமானம் ரூபா 3,090,687 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பேரேட்டின்படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஊழியர் கடன் மீதி ரூபா 8,007,878 தொகையாக காட்டப்பட்டபோதிலும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 8,089,127 தொகை எனக் காட்டப்பட்டுள்ளதால் ஊழியர் கடன் மீதி ரூபா 81,249 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(உ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 203,471,540 ஆகக் காட்டப்பட்ட நிலையான சொத்துக்களின் மொத்தத் தேறிய பெறுமதி 2014 ஜனவரி 01 இல் முன் கொண்டுவரப்பட்ட போது ரூபா 153,492,042 ஆகக் காட்டப்பட்டதனால் மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துக்களின் மொத்த தேறிய பெறுமதி ரூபா 50,145,498 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் ஒலிபெருக்கிகளைக் கொள்வனவு செய்வதற்காக விலை மனுக்கள் கோரப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த ஒலிபெருக்கிகள் ரூபா 49,950 இற்கு கொள்வனவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு கணக்குகளில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதினால் நிலையான சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் சபையால் ரூபா 695,000 தொகைக்கு "TATA ACE ZiP" வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டபோதிலும், இத்தொகை கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இறைச்சிக் கடை குத்தகைதாரர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய ரூபா 2,972,603 தொகையில் மாடுகளுக்கு ஏற்பட்ட "கால் மற்றும் வாய்" நோயினால் பாதிக்கப்பட்ட இறைச்சிக் கடை குத்தகையாளர்களுக்கு ரூபா 247,717 தொகை கழிவு வழங்கப்பட்டபோதிலும். இக்கழிவுத் தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கணக்காய்விற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வாகன திருத்தம் தொடர்பாக 2014 நவம்பர் 11 ஆம் திகதி வழங்கப்பட்ட ரூபா 417,875 தொகை கணக்குகளில் செலவாக காட்டப்படாது சொத்தாக காட்டப்பட்டுள்ளது.

1.3.4 பெறப்பட வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 1987 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு நிலுவையாகக் காணப்பட்டு இன்று வரை அறவிடப்படாதுள்ள பொதுச்சந்தைக் குத்தகை நிலுவை ரூபா 13,768,753 தொகைப் பணத்தை அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்டோபர் 05 வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு நிலுவையாகக் காணப்பட்டு இன்று வரை அறவிடப்படாதுள்ள இறைச்சிக்கடை குத்தகை நிலுவை ரூபா 6,436,834 தொகைப் பணத்தை அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்டோபர் 05 வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1987 ஆம் ஆண்டு சபையினால் பொதுச்சந்தையில் உள்ள 475 கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு இறுதிவரை கடைகளை வாடகைக்கு பெற்றவர்களிடமிருந்து ரூபா 13,497,553 தொகையை அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்டோபர் 05 வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1996 முதல் 2013 ஆம் ஆண்டு இறுதிவரையான காலத்திற்கு நிலுவையாகக் காணப்பட்டு இன்று வரை அறவிடப்படாதுள்ள துவிச்சக்கர வண்டி மற்றும் வாகனத் தரிப்பிடக் குத்தகை நிலுவை ரூபா 3,325,163 தொகைப் பணத்தை அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்டோபர் 05 வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 ஆவணச் சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| காணி மற்றும் கட்டிடம் | 119,239,060 | காணி உரிமைப்பத்திரங்கள் |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 4,751,565 | நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| பொறித்தொகுதியும் இயந்திரங்களும் | 5,086,250 | |
| வாகனங்களும் வண்டிகளும் | 11,130,013 | |
| கடன்கொடுத்தோர் | 9,945,808 | உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகள் |
| பொதுச்சந்தைக் கடை வாடகை நிலுவை | 13,497,553 | வாடகைப் பதிவேடு |
| முற்பண நிலுவைகள் | 34,981,246 | முற்பண பதிவேடு |

1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் | |
| அத்தியாயம் 252 பிரிவு 218 | ஆணையாளரினால் அவரின் நிர்வாகம் தொடர்பாக ஒவ்வொரு நிதி ஆண்டிற்காகவும் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த நிர்வாக அறிக்கை 2015 ஆண்டு தொடர்பாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை ஜனநாயகச் சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நி.பி 396 (டி) | வழங்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலாக பணமாக மாற்றுவதற்கு வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா. 69,462 கூட்டுமொத்த தொகையான 10 காசோலைகள் தொடர்பாக உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) நி.பி 571

ரூபா 989,162 பெறுமதியான 12 காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிரு க்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி சபையின் 2014 திசெம்பர் 31 திகதி நிதிப்பெறுபேறானது ரூபா 4,559,836 தொகையான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினத்தை விளைவித்திருந்ததுடன், இதற்கெதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 2,190,353 ஆக இருந்தது. இது நிதிப்பெறுபேற்றில் ரூபா 6,750,189 தொகை பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 ஆதன வரி

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252(1) (ஆ) பிரிவின் பிரகாரம் சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் குடியிருக்கும் 45,545 ஆதன உரிமையாளர்களிடமிருந்து 1988 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை அறவிடவேண்டிய ரூபா 83,475,778 தொகையான ஆதன வரியை அறவீடு செய்வது 2012 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட 05 வரி அறவீட்டாளர்கள் மற்றும் 03 நடுக்கட்டல் உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டுகளுக்காக மீளாய்வாண்டின் இறுதிவரை அவர்களால் ரூபா 5,285,342 தொகை மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் XXVIII இன் பிரிவு 1.3 இன் பிரகாரம் ஒவ்வொரு உத்தியோகத்தரின் வருகையும் வெளிச்செல்லும் வருகைப் பதிவேட்டில் பதியப்பட்டு கையெழுத்திடப்பட வேண்டிய போதிலும் மாநகர சபையின் மிருக வைத்திய அதிகாரி மற்றும் பொறியியலாளர் ஆகியோர் தாம் கடமைக்கு சமூகமளித்தமையை வருகைப் பதிவேட்டில் பதிவு செய்து கையொப்பம் இடாதிருந்த போதிலும் அவருக்கு 2014 ஜனவரி மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை சம்பளங்களும் படிகளும் உள்ளடங்கலாக முறையே ரூபா 538,440 மற்றும் ரூபா 311,220 தொகைகள் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 09/2009 ஆம் இலக்க 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களின் அலுவலகர்கள் உள்வருகை மற்றும் வெளிச் செல்கை உறுதிப்படுத்தலை பதிவுசெய்வதற்காக கைவிரல் அடையாளமிடும் இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 177 உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்ற மாநகர சபையில் கைவிரல் அடையாளமிடும் இயந்திரம் கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்டோபர் 05 வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இடமாற்றம் பெற்றுச்சென்ற 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 339,973 கடன் மீதியை அறவிடுவதற்கு 2015 ஒக்டோபர் 05 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது சபையால் வீதி விளக்குகளை பராமரிப்பது தொடர்பாக வீதி விளக்குகள் மற்றும் பொருத்துக்கள் ரூபா 1,194,675 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டபோதிலும், அப்பொருட்கள் சபையின் களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்படாது சபையின் முதல்வரின் செயலாளரினால் நேரடியாக பொறுப்பேற்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளதால் அப்பொருட்கள் உரிய தேவைக்கு பயன்படத்தப்பட்டுள்ளதா என்பதை கணக்காய்வில் உறுதிப்படுத்தமுடியாதிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் மாநகர சபையின் நிதியின் கீழ் மத ஸ்தலம் ஒன்றின் கட்டிட வேலை தொடர்பாக, கட்டிட பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 222,300 தொகை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும், 2015 ஒக்டோபர் 05 இல் மெற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனை வரை மாநகர சபையினால் அவ்வேலைகளை பூர்த்திசெய்வதற்காக கட்டிடப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. குறித்த இவ் வேலைக்காக 2013 ஆம் ஆண்டில் ''தேசத்திற்கு மகுடம்'' நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்ட செயலகத்தினால் ரூபா 391,020 செலவு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) இறைச்சிக் கடைகளை குத்தகைக்குப் பெற்ற மூன்று குத்தகைக்காரர் களிடமிருந்து பிணைப்பணமாக ரூபா 544,154 பெறுமதியான 06 காசோலைகள் 2013 மற்றும் மீளாய்வாண்டு காலப்பகுதியில் பெறப்பட்டு அக்காலப்பகுதியில் வங்கியில் வைப்புச்செய்யப்பட்டபின் வங்கியால் மறுக்கப்பட்டன. இவ்வாறு மறுக்கப்பட்ட காசோலைகளுக்காக உரிய குத்தகைக்காரர்களிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்டோபர் 05 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மாநகர சபையினால் 2013ஆம் ஆண்டில் ஒரு மடி கணனி ரூபா 85,000 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டு அலுவலக பாவனைக்காக பதவிநிலை உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது, 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி குறித்த உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த போதிலும் அம்மடி கணனியை மீளப்பெற்றுகொள்ள கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்டோபர் 05 ஆம் திகதி வரை மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அலுவலங்கள் இருக்கும் இடங்களைக் குறித்துக் காட்டும் குறிகாட்டி பலகையானது தயாரிக்கப்பட்டு, பொருத்துவதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 123,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும். 2015 ஒக்டோபர் 05 ஆம் திகதிய கணக்காய்வுப் பரிசோதனை வரை குறித்த பலகையானது மாநகர சபையில் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்.

---

சபைக்குச் சொந்தமான திருத்தம் செய்து பயன்படுத்தக் கூடிய நிலையிலுள்ள 07 உழவு இயந்திரங்கள், 04 இழுவைப்பெட்டிகள், தண்ணீர் பவுசர் 01, பிக்கப் வாகனம் 01 எக்ஸ்கவேட்டர் இயந்திரம் என்பன திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றன.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 பதிலளிக்கப்படாத ஐயவினாக்கள்

2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதி வரை வழங்கப்பட்ட 25 கணக்காய்வு ஐயவினாக்களில் 24 ஐயவினாக்களுக்கு இன்றுவரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழ் வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான சேகரிப்பு.
(இ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு